முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.03.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி.. | 09.03.2026 | சாட்சி.. | பி.வா.சா.1 |
| பெயர்.. | ஸ்ரீராமன் | வயது.. | 75 |
| தந்தை பெயர்.. | ரெங்கநாதன் | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ...**

26. 18.10.1986 ல் சங்க தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1975 முதல் 2003 வரை கூட்ட நடவடிக்கை சம்மந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில தாக்கல் செய்திருக்கிறேன். எந்த எந்த வருட ஆவணம் காணாமல் போனது என்றால் 13.10.2010 இல், 1985 இருந்து 2010 வரை இருக்கும் ஆவணங்களான வீட்டு வரி ரசீதுதகள், EB bill.., குடிநீர் வரி ரசீதுகள் mintus book, Circular book, கணக்கு வழக்கு புக் ஆகும். புகாரில் 1985 இல் இருந்து 2010 வரை உள்ள ஆவணங்கள் என்று குறிப்பிட்டிருக்கேறேனா என்றால் குறிப்பிட்டிருக்கிறேன். புவனகிரி வர்த்தக சங்கம் என்கிற பூராசாமி வர்த்தக சங்கம் என்று பதிவு அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் தன்னுடைய பணத்தை வைத்து கட்டணம் செலுத்தியதற்கான ஆவணம் இருக்கிறதா என்றால் வரவு செலவு கணக்கு உள்ளது, எனது தகப்பனார் தரைதளம் கட்டுவதற்கு யாரிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் மணவாளன் பிள்ளை என்பவரிடம் சுமார் ரூ.3000/- முதல் 5000 வரை புரோ நோட்டு மூலம் கடனாக வாங்கியிருந்தார் நான்கு கடை கட்டுவதற்கு வாங்கப்பட்டது வீட்டிற்காக இல்லை.

27. எனது தகப்பனார் கடன் வாங்கி நான்கு கடை கட்டினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் காலத்தில் 4 கடைகள் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல. கலியபெருமாளிடம் வாடகை பத்திரம் உள்ளதா

என்றால் 15.02.1980 இல் வாடகை கடையை காலி செய்வதற்கான ரசீது உள்ளது. வாதி சங்கம் சார்பாக செயலாளர் வழக்கு நடத்த ஒப்புதல் கொடுக்கப்பட்டதா என்றால் வாதி சங்கம் எங்கு நடக்கிறதே என்று தெரியாது ஒப்புதல் கொடுக்கப்பட்டதா என்பது பற்றி தெரியாது. 1975 முதல் 1985 வரை ஆவணங்கள் உள்ளதா என்றால் சொத்து வரி யார் கட்டினார்கள் என்பதற்கான extract நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். புவனகிரி வர்த்தக சங்கம் என்கிற பூராசாமி வர்த்தக சங்கம் என்று ஒன்று இல்லை என்றால் சரியல்ல, அதனை 1ம் வாதி ரத்தின சுப்பிரமணியன் வாக்குமூலத்தில் பக்கம் 7 இல் மேற்சொன்ன வர்த்தக சங்கம் இருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

28. 25.09.2003 இல் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் ஒரே சங்கதத்தில் இரண்டு தலைவர்கள் இருப்பதாக இரண்டு நோட்டீஸ் கொடுத்தார்கள். அதனால் நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. அதை குறிப்பிட்டு ஏன் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சங்கத்திற்கு 4 முகவரிகள் இருப்பதாக கூறியதால் கொடுக்கவில்லை. ரத்தினசபாபதி அறிவிப்பில் அவருடைய முகவரியை குறிப்பிட்டிருந்தார் என்றாலும் அதற்கு பதில் அனுப்பவில்லை என்று சொன்னாலும் நோட்டீஸ் அனுப்பவில்லை. 1890 இல் சங்கம் இல்லை சொத்து இருந்தது. என்னுடைய பிரஸ்யை உடைத்து ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சங்கம் தான் உண்மையான புவனகிரி வர்த்தக சங்கம் என்று சொன்னால் சரியல்ல அதற்கு 4 முகவரிகள் உள்ளன.

29. நான் புவனகிரி வர்த்தக சங்கத்தின் தலைவராக எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய இந்த வழக்கின் எதிர்வழக்குரையை 1985 முதல் 2003 வரை உள்ள ஆவணங்கள் தருடு போய்விட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சொல்லியிருக்கிறேன். தற்போது குடியிருக்கும் இடத்திற்கு வாடகை கொடுக்காமல் இருந்து வருகிறேன் என்றால் அதனை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. பூராசாமி வர்த்தக சங்கத்தில் 11 நபர்களோ உறுப்பினர்களாக இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.